ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நிதா$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

# நம்மாழ்வார் அருளிச்செய்த

# ॥ அஞ்சிறைய ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ அஞ்சிறைய ॥

## தலைமகள் தூதுவிடல்

‡அஞ்சிறைய மட நாராய்!⋆ அளியத்தாய்!⋆ நீயும் நின்
அஞ்சிறைய சேவலுமாய்⋆ ஆவா என்றெனக்கருளி⋆
வெஞ்சிறைப் புள்ளுயர்த்தாற்க்கு⋆ என் விடு தூதாய்ச் சென்றக்கால்⋆
வன்சிறையில் அவன் வைக்கில்⋆ வைப்புண்டால் என்செய்யுமோ (1)

என்செய்ய தாமரைக் கண்⋆ பெருமானார்க்கென் தூதாய்⋆
என்செய்யும் உரைத்தக்கால்⋆ இனக் குயில்காள்! நீர் அலிரே⋆
முன்செய்த முழுவினையால்⋆ திருவடிக்கீழ்க் குற்றேவல்⋆
முன்செய்ய முயலாதேன்⋆ அகல்வதுவோ விதியினமே (2)

விதியினால் பெடை மணக்கும்⋆ மென் நடைய அன்னங்காள்!⋆
மதியினால் குறள் மாணாய்⋆ உலகிரந்த கள்வற்கு⋆
மதியிலேன் வல் வினையே⋆ மாளாதோ என்றொருத்தி⋆
மதியெலாம் உள் கலங்கி⋆ மயங்குமால் என்னீரே (3)

என் நீர்மை கண்டிரங்கி⋆ இது தகாதென்னாத⋆
என் நீல முகில் வண்ணற்கு⋆ என் சொல்லி யான் சொல்லுகேனோ⋆
நன் நீர்மை இனியவர் கண்⋆ தங்காதென்றொரு வாய்ச்சொல்⋆
நன் நீல மகன்றில்காள்!⋆ நல்குதிரோ நல்கீரோ (4)

நல்கித் தான் காத்தளிக்கும்⋆ பொழில் ஏழும் வினையேற்கே⋆
நல்கத் தான் ஆகாதோ⋆ நாரணனைக் கண்டக்கால்⋆
மல்கு நீர்ப் புனற்படப்பை⋆ இரை தேர் வண் சிறு குருகே!⋆
மல்கு நீர்க் கண்ணேற்கு⋆ ஓர் வாசகம் கொண்டருளாயே (5)

அருளாத நீர் அருளி⋆ அவர் ஆவி துவராமுன்⋆
அருள் ஆழிப் புட்கடவீர்⋆ அவர் வீதி ஒருநாள் என்று⋆
அருள் ஆழி அம்மானைக்⋆ கண்டக்கால் இது சொல்லி⋆
அருள் ஆழி வரி வண்டே!⋆ யாமும் என் பிழைத்தோமே (6)

www.prapatti.com

என் பிழை கோப்பது போலப்⋆ பனி வாடை ஈர்கின்ற⋆
என் பிழையே நினைந்தருளி⋆ அருளாத திருமாலார்க்கு⋆
என் பிழைத்தாள் திருவடியின்⋆ தகவினுக்கென்றொரு வாய்ச்சொல்⋆
என் பிழைக்கும் இளங்கிளியே!⋆ யான் வளர்த்த நீ அலையே (7)

நீ அலையே சிறு பூவாய்!⋆ நெடுமாலார்க்கென் தூதாய்⋆
நோய் எனது நுவல் என்ன⋆ நுவலாதே இருந்தொழிந்தாய்⋆
சாயலொடு மணி மாமை⋆ தளர்ந்தேன் நான்⋆ இனி உனது
வாய் அலகில் இன்னடிசில்⋆ வைப்பாரை நாடாயே (8)

நாடாத மலர் நாடி⋆ நாள் தோறும் நாரணன் தன்⋆
வாடாத மலர் அடிக்கீழ்⋆ வைக்கவே வகுக்கின்று⋆
வீடாடி வீற்றிருத்தல்⋆ வினையற்றதென் செய்வதோ⋆
ஊடாடு பனி வாடாய்!⋆ உரைத்தீராய் எனதுடலே (9)

உடல் ஆழிப் பிறப்பு வீடு⋆ உயிர் முதலா முற்றுமாய்⋆
கடல் ஆழி நீர் தோற்றி⋆ அதனுள்ளே கண் வளரும்⋆
அடல் ஆழி அம்மானைக்⋆ கண்டக்கால் இது சொல்லி⋆
விடல் ஆழி மட நெஞ்சே!⋆ வினையோம் ஒன்றாம் அளவே (10)

‡அளவியன்ற ஏழ் உலகத்தவர்⋆ பெருமான் கண்ணனை⋆
வள வயல் சூழ் வண் குருகூர்ச்⋆ சடகோபன் வாய்ந்துரைத்த⋆
அளவியன்ற அந்தாதி⋆ ஆயிரத்துள் இப்பத்தின்⋆
வளவுரையால் பெறலாகும்⋆ வான் ஓங்கு பெரு வளமே (11)

‖ நம்மாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com